DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 489/2019 |
| Deposition of Witness for | PW 1 |
| Name | தாசன் |
| Father / Husband Name | அருளானந்தம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 22nd October 2024.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்சமயம் சாலைகிராமம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் காளையார்கோவில் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்த சமயம் 24.07.2018 ம் தேதியன்று காவல் ஆய்வாளர் அவர்களுக்கு பெரிய கண்ணனூர் நாட்டார் ஆற்றில் திருட்டுதனமாக டிராக்டரில் மண் அள்ளுவதாக கிடைத்த தகவலின் பேரில் காவல் ஆய்வாளருடன் நானும் சார்பு ஆய்வாளர் ரஞ்சித், காவலர் சசிக்குமார், தேவசேனன் ஆகியோர்களுடன் 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்த்தபோது அங்கு ஆற்றிற்குள் செல்வதற்காக கரையை உடைத்து சேதப்படுத்தி ஆற்றுக்குள் சென்றுவர அமைத்து வைத்திருந்த வழித்தடத்தில்

நாங்கள் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி அந்த ஆற்றில் டிராக்டருடன் கூடிய டிரய்லரில் மண் அள்ளிக் கொண்டிருந்தார்.

2) அங்கு வேலைப் பார்த்தவர்கள் எங்களைக் கண்டதும் ஓடிவிட்டார்கள். எதிரியைப் பிடித்து விசாரித்தபோது எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் கடவுச்சீட்டும் இல்லாமல் லாப நோக்கத்துடன் திருட்டுத் தனமாக மணல் அள்ளியதை ஒப்புக்கொண்ட ஆஜர் எதிரியை 14.15 மணிக்கு காவல் ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்து வெளி சாட்சி யாரும் இல்லாததால் ஆஜர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 14.30 மணிக்கு போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து அத்தாட்சியின் பேரில் மண்வெட்டி, சாந்துசட்டி, டிராக்டர், டிரெய்லர் ஆகியவற்றை ஆய்வாளர் கைப்பற்றினார்.

3) பின்பு 16.45 மணிக்கு எதிரியையும் கைப்பற்றப்பட்ட பொருள்களையும் நிலையம் கொண்டு வர காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் எத்தனை மணிக்கு ரோந்துக்கு சென்றேன் என்றால் 24.07.2018 ம் தேதியன்று மதியம் 01.00 மணிக்கு ஆய்வாளர் ஜீப்பில் சென்றோம். ஜீப் காவல் வாகனத்தை யார் ஓட்டியது என்றால் ஞாபகமில்லை. யாரெல்லாம் ரோந்து சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் ரஞ்சித், காவலர் சசிக்குமார், தேவசேனன் காவலர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர்கள் சென்றோம். நாங்கள் எங்கெல்லாம் ரோந்து பணி சென்றோம் என்றால் நேராக பெரிய கண்ணனூர் நாட்டார் ஆறு பகுதிக்கு சென்றோம்.

2) காளையார்கோவில் காவல் நிலையத்திற்கும் பெரிய கண்ணனூர் நாட்டார் ஆறு பகுதி எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 25 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். பெரிய கண்ணனூர் நாட்டார் ஆற்றின் எந்த பகுதியில் எதிரிகளைப் பார்த்தோம் என்றால் சரியாக தெரியவில்லை. ரோந்துக்கு சென்ற காவலர் அனைவரும் கேமரா செல்போன் வைத்திருந்தோம் என்றால் சரிதான். நாங்கள் வழக்கு நடந்ததாக சொல்லப்படும் இடம் எந்த வருவாய் கிராமத்திற்கு உட்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது.

3) வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் சுற்றி வயல் பகுதிகள் அமைந்த இடம் என்றால் சரிதான். வழக்கு கரையை சேதப்படுத்தியாக சொல்லப்படும் இடத்தை புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை விசாரணை செய்து காவல் ஆய்வாளர் வாக்குமூலத்தை கைப்பட பதிவு செய்து கொண்டார் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களை காவல் நிலையத்திற்கு யார் எடுத்து வந்தார்கள் என்றால் வழக்குச் சொத்தை நான் மற்றும் என்னுடன் வந்த காவலர்கள் அனைவரும் சேர்ந்து எடுத்து வந்தோம்.

4) வழக்குச் சொத்தான டிராக்டரை யார் ஓட்டி வந்தார் என்றால் காவலர் தான் ஓட்டி வந்தார் யார் என்று ஞாபகமில்லை. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நாங்கள் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் அரை மணிநேரம் இருந்தோம் அதற்குள் காவல் ஆய்வாளர் ஆவணங்களை தயார் செய்தார் அந்த ஆவணங்கள் கைப்பட எழுதி தயார் செய்ததாகும். நான் சொல்வதுபோல் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு செல்லவில்லை என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சொத்தைக் கைப்பற்றவில்லை என்றும் காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5) எனது பணி சம்பந்தமான நோட் புத்தகத்தை ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 22.10.2024,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 489/2019 |
| Deposition of Witness for | PW 2 |
| Name | **தேவசேனன்** |
| Father / Husband Name | **வெள்ளைச்சாமி** |
| Village | |
| Taluk | **சிவகங்கை** |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 22nd October 2024.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்சமயம் தேவக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் காளையார்கோவில் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த சமயம் 24.07.2018 ம் தேதியன்று காவல் ஆய்வாளர் அவர்களுக்கு பெரிய கண்ணனூர் நாட்டார் ஆற்றில் திருட்டுதனமாக டிராக்டரில் மண் அள்ளுவதாக கிடைத்த தகவலின் பேரில் காவல் ஆய்வாளருடன் நானும் சார்பு ஆய்வாளர் ரஞ்சித், காவலர் சசிக்குமார், தாசன் அ.சா.1 ஆகியோர்களுடன் 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்த்தபோது அங்கு ஆற்றிற்குள் செல்வதற்காக கரையை உடைத்து சேதப்படுத்தி ஆற்றுக்குள் சென்றுவர அமைத்து வைத்திருந்த வழித்தடத்தில்

நாங்கள் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி அந்த ஆற்றில் டிராக்டருடன் கூடிய டிரய்லரில் மண் அள்ளிக் கொண்டிருந்தார்.

2) அங்கு வேலைப் பார்த்தவர்கள் எங்களைக் கண்டதும் ஓடிவிட்டார்கள். எதிரியைப் பிடித்து விசாரித்தபோது எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் கடவுச்சீட்டும் இல்லாமல் லாப நோக்கத்துடன் திருட்டுத் தனமாக மணல் அள்ளியதை ஒப்புக்கொண்ட ஆஜர் எதிரியை 14.15 மணிக்கு காவல் ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்து வெளி சாட்சி யாரும் இல்லாததால் ஆஜர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 14.30 மணிக்கு போலீஸ் சாட்சிகளான என் முன்னிலையிலும் சசிக்குமார் என்பவர் முன்னிலையிலும் பதிவு செய்து அத்தாட்சியின் பேரில் 2 மண்வெட்டி, 2 சாந்துசட்டி, மணலுடன் டிராக்டர் TN 63 J 1303, டிரெய்லர் TN 63 J 6662 ஆகியவற்றை ஆய்வாளர் கைப்பற்றினார். எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்து பொருள்களைக் கைப்பற்றியதற்காக நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம்.

3) என்னிடம் காட்டப்படும் ஆஜர் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு 16.45 மணிக்கு எதிரியையும் கைப்பற்றப்பட்ட பொருள்களையும் நிலையம் கொண்டு வர காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) என்னை எப்போது எங்கு யார் விசாரணை செய்தார்கள் என்றால் ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார். நான் எப்போது ரோந்து பணிக்கு சென்றேன் என்றால் மதியம் 01.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர் ஜீப்பில் சென்றேன். அன்றைய தினம் சாட்சி சசிக்குமார் என்பவர் தான் காவல் நிலைய வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான்.

2) சாட்சிப்பட்டியலில் அனைத்து காவலர்களும் காவல் நிலைய வாகனத்தில் தான் சென்றோம் என்றால் சரிதான். ரோந்து பணிக்கு எங்கெல்லாம் சென்றோம் என்றால் நேரடியாக சம்பவ இடத்திற்கு தான் சென்றோம். சம்பவ இடமாக சொல்லப்படும் ஆற்றில் எந்த பகுதி எதிரிகளைப் பார்த்தேன் என்றால் நாட்டார் ஆற்றின் கழுங்கிலிருந்து 50 அடி துாரத்தில் பார்த்தோம் திசை எனக்கு தெரியாது. நான் சென்றபோது எதிரிகள் எத்தனை பேர் இருந்தார்கள் எங்கு ஓடினார்கள் என்றால் 5 நபர்கள் இருந்தார்கள் எங்கு ஓடினார்கள் என்று எனக்குத் தெரியாது.

3) எங்கள் காவல் நிலையத்தில் கையடக்க கேமரா உள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. ரோந்து பணிக்கு செல்லும்போது கேமரா கொண்டு செல்வார்களா என்றால் எனக்குத் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது எந்த கிராமத்தைச் சார்ந்தது என்றால் பெரிய கண்ணுார் கிராமம் ஆகும். பெரிய கண்ணுார் கிராமத்திலிருந்து வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 3 கிலோ மீட்டர்.

4) பெரிய கண்ணுார் கிராமத்தில் குற்ற நடவடிக்கை தடுப்பதற்கு பாதுகாப்புக்கு போலீசார் இருப்பார்களா என்றால் இருக்கமாட்டார்கள். வழக்கில் கைப்பற்றியுள்ள மண்வெட்டியின் கைப்பிடி மரத்தால் ஆனதா அல்லது இரும்பால் ஆனதா என்றால் மரத்தால் ஆனது. மண்வெட்டி அரைமண்வெட்டியா முழு நீள மண்வெட்டியா என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு ஆவணங்களை காவல் ஆய்வாளர் தான் தயார் செய்தார் என்றால் சரிதான்.

5) ஒப்புதல் வாக்குமூலத்திலும் அத்தாட்சி ஆகிய ஆவணங்களில் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். ஆய்வாளர் தயார் செய்த மேற்படி ஆவணங்களை அங்கு வைத்தே print எடுத்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் வைத்து print எடுக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6) வழக்கு சொத்து ஆவணத்தை காவல் நிலையத்திற்கு யார் எடுத்து வந்தார்கள் என்றால் சசிக்குமார் என்ற காவலர் தான் எடுத்து வந்தார். காவல் நிலையத்திலிருந்து கிளம்பும்போதே கணிணி, பிரிண்டர் போன்ற உபகரணங்களை எடுத்துச் சென்றோம் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்

இடத்தின் நான்கு புறமும் என்னென் இருந்தது என்றால் வயல்வெளிகள் உள்ளது. மண்பாதை கிடையாது என்றால் சரிதான்.

7) வாகனத்தில் கைப்பற்றிய பொருள்களைத் தவிர வேறு பொருள்கள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நான் சொன்ன விதத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும் ஆய்வாளர் வேண்டுகோளுக்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும் சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஓம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 22.10.2024,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.